இதழ்-70

01.04.2024

# தூமி

பல்சுவை மின்னிதழ்




பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...


03 செயல் வீரர் அல்லவா... அவர் சிறப்பெல்லாம் சொல்லவா...?

07 யாருக்கானது இந்த முட்டாள் தினம்?

13 செஞ்சொற்செல்வருக்கு ஞானவாய்ச்சியன் விருது

14 வளர்த்த பல்லி கடித்து மரணம்

15 பாடசாலைகளில் இயக்கத்திறனை பயன்படுத்துவதற்கான முக்கியத்துவம்

22 காக்காய் பார்லிமென்ட்

26 நம் எதிரிகள்

27 என் கால்கள் வழியே...

31 முன்னணியில் இன்ஸ்டாகிராம்

33 வன்போக்கு நடத்தையை குறைத்தல்

37 CSK இன் வெற்றியின் இரகசியம்




வாசகர்கள் அனைவருக்கும்
இனிய தமிழ் சிங்கள
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

# செயல்வீரர் அல்லவா? அவர் சிறப்பெல்லாம சொல்லவா?




தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மிகப் பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்டு, அண்மையில் பங்குனி உத்திர திருநாளில் கும்பாபிஷேகம் கண்டிருக்கிறது. இந்த ஆலய புனருத்தாரணத்தை அளவீட்டுப் பரிமாணத்தில் பார்த்தால் நீளத்தில் அதிகமாகி இருக்கிறது. அகலத்தில் அதிகமாகி இருக்கிறது. உயரத்திலும் அதிகமாகி இருக்கிறது. அரசர் காலத்தில் தான் ஆலயங்கள் கருங்கல்லால் கட்டப்படும். ஆனால் அவற்றிற்கும் பல்லாண்டுகள் எடுக்கும். இராஜ இராஜ சோழன் தொடங்கிய ஆலய நிர்மாணத்தை மகன் இராஜேந்திர சோழன் வந்துதான் பூரணப்படுத்த முடிந்தது. அதுதான் இன்றுவரை அதிசயங்களுக்குள் அகப்படாத அதிசயமாக தஞ்சையில் நிமிர்ந்து நிற்கும் பெருவுடையார் திருக்கோவில். ஆனால் பாலஸ்தாபனம் செய்து அண்ணளவாக ஆறே மாதங்களில் இந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கும்பாபிஷேகம் நிறைவடைந்திருக்கிறது என்றால் இந்த இதனை சாதாரண விடயமாக கடந்து செல்ல முடியாது.



ஆலய உட்பிரகாரத்தின் நிலம் மற்றும் கருவறை முழுவதும் கருங்கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உள் வீதி சுற்று மதில்கள் உடைக்கப்பட்டு உள் வீதி அகலமாக்கப்பட்டுள்ளது. கூரை முழுவதும் கழட்டப்பட்டு, உறுதியான புதிய கூரை போடப்பட்டுள்ளது. அபிராமி அந்தாதி பாடல்கள் யாவும் கருங்கல்லில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பழைய தூண்கள் யாவும் இடிக்கப்பட்டு பொறியியல் ரீதியில் உறுதியான புதிய தூண்கள் அழகியல் வேலைப் பாடுகளுடன் நிர்மாதெய்வீகத் திருத்தலங்களின் புகைப்படங்களும், ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய சம்பவங்களின் படங்களும் பிரமாண்டமான முறையில் உட்புற சுற்றுச் சுவரில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வசந்த மண்டபமும் அகலமாக்கப் பட்டுள்ளது. பஞ்ச கோபுரங்கள் உட்பட ஆலயம் முழுவதும் புது வர்ணம் பூசும் வேலைகளும் நடைபெறுகின்றன. அழகிய மின் விளக்குகள் ஆலயத்தின் அழகியல் வேலைப்பாடுகளை மேலும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு பல்வேறு கலைநயம் மிக்க வேலைப்பாடுகளுடன் காலம் தாண்டி நிலைபெறுமாறு கருங்கற்களாலும் அழகியல் ததும்ப இந்த ஆலயம் ஆறே மாதங்களில் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதை நினைக்கும் போது ஆச்சரியங்களால் சித்தம் நிரம்புகிறது. எத்தனை பெரிய



கைங்கரியம். இந்த வரலாற்று சம்பவம் நடந்த காலப்பகுதியில் நாமும் வாழ்ந்தோம், இத் திருப்பணிகளை நேரில் கண்டோம் என்பதே பெரும் பாக்கியம். இது தலை முறை கடந்து தொடரும் பெரும் புண்ணியம்.

இந்தப் பாரிய திருப்பணி நேர்த்தியாக இந்தக் குறுகிய காலக்கிரமத்தில் நடந்து முடிந்திருக்கிறதென்றால் அதற்கு எமக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு சக்திதான் காரணமென்பதை மறுக்க முடியாது. அவளருள் இல்லாமல் அவள் தாள் வணங்க முடியாது. இருந்தாலும் இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக ஒருவரது அரும்பெரும் முயற்சி இருந்திருக்கிறது என்றால் அது மிகையல்ல. அவர் இல்லாவிட்டால் இவற்றை யார் செய்வார்கள் எனும் அளவிற்கு அணு அணுவாக தான் கற்பனையில் கண்டவற்றை ரசித்து ரசித்து நிஜமாக்கியிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல. உலக அளவில் ஈழத்தின் சைவத் தமிழ் பெருமைகளை பேச வைத்திருப்பதற்கு முக்கிய காரணமானவர். அறப்பணிகளுக்காகவும் சமயப் பணிகளுக்காகவும் தனது வாழ்க்கையையே அர்ப்பணித்த பெருமகனார். தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் தற்போதய நிர்வாகத் தலைவர். இலங்கையின் சகல பாகங்களிலும் பல்வேறு அறப்பணிகளை புரியும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர். ஆம். வாக்கு வன்மைக்கு ஏற்ப செஞ்சொற்செல்வர் என்று அழைக்கப்படும் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்.

ஈழத்தின் அடையாளங்கள் எல்லாம் யுத்தம் என்ற பெயரால் இல்லாது அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் தனது பேச்சு வன்மையாலும் நேர்மையாலும் அகத்திலும் புலத்திலும் வாழும் உறவுகளின் நம்பிக்கைக்குரியவராக மாறி, அவர்களிடமிருந்து நன்கொடையாக கிடைத்த பெருமளவு பணத்தை கொண்டு, வரலாறு தாண்டி நிற்கும் பாரிய வேலைத் திட்டங்களை செஞ்சொற்செல்வர் மேற்கொண்டிருக்கிறார். இவர் ஆற்றுகின்ற பணிகளை எல்லாம் மற்றவர்கள் கற்பனையிலும் நினைக்க முடியாததாக இருக்கும். ஆனால் அவற்றை திட்டமிட்டு திறம்படவும் மிக விரைவாகவும் நிகழ்த்திக் காட்டி விடுவார். தலைமைத்துவத்தின் அத்தனை அம்சங்களுக்கும் வாழும் உதாரணமாக உள்ளார் ஆறு.திருமுருகன் ஐயா அவர்கள்.





சிவபூமி திருப்பணிகள் ஆகட்டும், தற்போது நடைபெற்ற துர்க்கையம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக புனருத்தாரண திருப்பணிகள் ஆகட்டும் பெரியவர் தன்னை அதற்குள் முழுமையாக ஈடுபடுத்தி இரவு பகலாக தானும் அந்தந்த இடங்களிலே நின்று, மேற்பார்வை செய்து, வேலையாட்களோடு தன்னையும் இணைத்துக் கொண்டு அவர் செயற்படும் விதம் அனைவரும் கற்க வேண்டிய பாடம்.

”எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு.” எனும் வள்ளுவனார் வாக்கிற்கு இணங்க, உடனிருப்பவர்கள் அச்சப்பட்டாலும், தெய்வத்தின் மீதும் தான் செய்கின்ற அறத்தின் மீதும் நம்பிக்கை வைத்து திருப்பணிகளை துணிவோடு தொடங்கி பூரணத்துவமாக்குவது ஆறு.திருமுருகன் ஐயாவிற்கு வழக்கமான ஒன்று. துர்க்கையம்மன் ஆலயத்தின் இந்த பாரிய திருப்பணியை இவ்வளவு விரைவாக முடிக்க முடியாது, கும்பாபிஷே கத்தை பிற்போடலாம் என்று பலரும் சொன்ன போது அதை துணிவுடன் எதிர்கொண்டு பெருமளவு பணிகளை குறித்த நேரத்திற்குள் முடித்து கும்பாபிஷேகத்தையும் குறித்த திகதியில் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ”நாங்கள் எங்கள் வேலைகளை செய்து கொண்டு போவோம். நிறைவு பெற்ற வேலைகளோடு கும்பாபிஷேகத்தை நடாத்துவோம். ஏதாவது குற்றங்கள் இருந்தாலோ அம்பாளுக்கு பிடிக்கவில்லை என்றாலோ அவள் சமிக்ஞைகள் மூலம் காட்டுவாள். அப்போது நிறுத்திக் கொள்ளலாம்.” என்கின்ற நேர் சிந்தனையுடனான துணிவு செஞ்சொற் செல்வருக்கே உரித்தான தனி இயல்பு. தெய்வத்தையும் நாளையும் கோளையும் நினைத்து மற்றவர்கள் பயந்து கொண்டிருக்க, எல்லாம் நமக்குத் துணை செய்யும் என்று நம்பி காரியங்கள் ஆற்றுவதுதான் அவருக்கு இவ்வளவு பணிகளையும் ஆற்றும் நேரத்தை தந்திருக்கிறது.

எங்கள் மண்ணிலிருந்து ஒருவர் உலகறிந்த பேச்சாளராக, சேவையாளராக, அறப்பணியாராக, சமயப்பெரியவராக உள்ளமையை இட்டு நாமெல்லாம் எவ்வளவு பெருமைப்பட வேண்டும். அவர் செய்யும் பாரிய செயற்திட்டங்களுக்கு படிக்கற்களாக இல்லாவிட்டாலும் தடைக்கற்களாக இருந்துவிடவே கூடாது. ஆனால் நம்மில் சிலர் என்ன



செய்கிறோம்? அவர் செய்பவற்றை மேலோட்டமாகப் பாரத்துவிட்டு அது தவறு இது தவறு என்று விமர்சித்துக் கொண்டிருக்கிறோம். அவரின் தூர நோக்குடனான உயரிய சிந்தனைகளை உணராமல் அவரை மனதளவில் காயப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இவை மகாபாவம். முற்றத்து மல்லிகைகள் மணப்பதில்லை என்பது சரியாகத்தான் உள்ளது.

அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதே பெருமையாக உள்ள போது அவரின் பணிகளுக்கு நாங்கள் எள்ளளவும் இடையூறாக இருக்கக் கூடாது. தெய்வத் திருவருளால் இப்படியொரு பெருமகனார் கிடைத்திருக்கிறார். பல மக்களும் அவரை நம்பி தமது சொத்துக்களை அறப்பணிகளுக்கு அர்ப்பணிக்கிறார்கள். எல்லோரது நம்பிக்கைக்கும் உரியவராக உள்ள இவரை தவிர்த்து இன்னொருவரை ஈழத்தில் காட்டுங்கள் பார்க்கலாம். இல்லை என்பதே நிதர்சனம். எனவே, ராமர் பாலத்திற்கு அணில்கள் செய்த உதவி போல நம்மாலான சிறு உதவிகளையேனும் செய்து அவருக்கு பக்கதுணையாக இருக்க வேண்டும். செஞ்சொற்செல்வர் மனதளவிலும் உடலளவிலும் பலமாக பல்லாண்டுகள் வாழ்ந்து மேலும் பல பணிகள் செய்ய எல்லாம் வல்ல இறை அருள் புரிய பிரார்த்திக்கிறோம்.

*புகைப்படங்கள்*
*யாழ் நிக்கொன்*













## யாருக்கானது

# இந்த முட்டாள் தினம்..?

பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதை விடவும், ஊதிப் பெருப்பித்து, பிரச்சினையில் குளிர்காயவே ஒரு சிலர் நினைக்கின்றனர். ஒரு சிறு தணலைக் கனலாக்கும் அளவுக்கு, தலைகீழாகச் சிந்திக்கும் திறமை, அந்த ஒருசிலருக்கே உண்டு.

ஊதிப் பெருப்பிக்கப்பட்டமையால், இரண்டு சமூகங்களுக்கு இடையே ஏற்படும் பிரிவினை சதாகாலமும் தீர்க்கமுடியாது, புகைந்துகொண்டே இருக்கும்.

இரண்டு ஊர் மக்களிடத்தில் கசப்புணர்வுகள் ஏற்படுமாயின், அறிவு பூர்வமான மக்கள், ஒப்புக் கொள்ளக்கூடிய பல சமாதானங்களைக் கூறி, அம்மக்களின் விரோத மனப்பான்மையைப் போக்கும் வகையில் செயற்படச் சிந்திப்பர்.

ஆனால், “ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்” என்பர். அதாவது, கூத்தாடிக்கு வருமானம் அதிகரிக்கும்.

கூத்தாடிகளே இன்று எல்லா துறையிலும் அதிக இலாபம் கண்டு உயர்ந்து கொண்டிருக்கின்றனர். அரசியல், வியாபாரம், மதம், சமூக சேவை என எல்லா பரிமாணங்களிலும் கூத்தாடிகளே மக்களை முட்டாளாக்கி இலாபம் காண்கின்றனர்.

அவர்களது ஒரே நம்பிக்கை, ஒரே மூலதனம் - முட்டாளாயுள்ள மக்கள்

மட்டுமே! தொடர்ந்தும் மக்களை முட்டாளாய் வைத்திருப்பதற்கான வழிமுறைகளையும் அவர்கள் தொடர்ந்து பேணி வருகிறார்கள்.

மக்கள் தம்முடையே உள்ள முட்டாள்தனத்தை உணராமல் அடுத்தவர்களை முட்டாள்கள் என்று முத்திரை குத்தும் முயற்சியிலே மும்முரம் காட்டுகின்றனர்.

புதுமை வாதிகள் பழமை விரும்பிகளிற்கு முட்டாள் முத்திரை குத்துகின்றனர். பழைமை வாதிகள் புதிய கொள்கைகள் கொண்டவர்களை முட்டாள் என்று அறிமுகப்படுத்துகின்றனர். ஒரு மதத் தத்துவங்களை கொண்டாடுபவர்கள் இன்னொரு மதத்தினரை முட்டாள் என்றே நம்புகின்றனர். வியாபாரிகள் மக்களை முட்டாள் என்று முடிவெடுத்தே வியாபாரம் செய்கின்றனர். நுகர்வோரும் வியாபாரிகளை முட்டாளாக்கி கொள்வனவு செய்ய தொடர்ந்தும் முனைகின்றார்கள். அரசியல் என்பதே முட்டாள்களின் கூடாரம் என்று சொல்லக்கூடிய வகையில் இன்று ஆகிவிட்டது.

இப்படி எல்லோரும் இன்னொருவரை முட்டாளாக்கி தம்மை புத்திசாலியாக காட்டிக் கொள்ளும் முயற்சியிலே இவ்வுலகம் இச்சமயம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

உலக அளவில் மகளிர் தினம், நண்பர்கள் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், குழந்தைகள் தினம், தொழிலாளர்கள் தினம் என்று மக்களுக்குப் பலவிதமான தினங்கள் இருப்பது போலவே முட்டாள்களுக்கும் என்று ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய தினங்களுக்கு உரிமை கொண்டாடுவதைப் போல இத்தினத்தில் தமக்கும் பங்கிருப்பதாகச் சொல்லிக் கொள்ள எவரும் முன்வருவதில்லை.

அதே நேரம் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் அடுத்தவரை முட்டாளாக்க முனையும் “முட்டாள்தனமான அறிவாளிகளின் தினம்“ என்று இன்றைய தினத்தைக் கூறினாலும் பிழையாகாது. ஆம்.. நாமெல்லாம் பள்ளிப் பருவத்தில்.. சக நண்பர்களிடம், வீட்டில் உள்ளவர்களிடம் அன்று ஏமாறாமல் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்ட நாட்களை மறக்க முடியாது.

அதேபோல ஒருவரையாவது ஏமாற்றி விட வேண்டும் என்ற விளையாட்டுத்தனமும் அதில் இருந்த ஆர்வமும் மறக்க முடியாது. உன் சட்டையிலே என்ன கறை ? உன் பின்னால் பாம்பு..? என்று ஆரம்பித்து பல ஏமாற்றுக் கேள்விகளை நண்பர்களிடம் சொல்லி...ஏமாற்றி விளையாடி இருப்போம்.. அதுதான் இந்த ஏப்ரல் முதல் தேதியாகும்.



ஏமாற்றுவதையும் ஏமாறுவதையும் சிரித்துக்கொண்டே ஏற்றுக்கொள்ளும் ஒரு தினம்.

ஆனால் வளர்ந்த பின்னர் இவை சாரமற்றுப்போய்விட்டன. ஒருவரை நாம் ஏமாற்றினால் நம்மை இன்னொருவர் ஏமாற்றுவார்கள் என்று வாழ்க்கை சில பல பாடங்களை அழுத்தமாகச் சொல்லிக் கொடுப்பதால் இதுபோன்ற சிறு பிள்ளைகளின் விளையாட்டுத் தனங்களில் பெரும்பாலனவர்கள் ஈடுபவடுவதில்லை. ஆனாலும் குழந்தை மனம் கொண்ட சிலர் ஏப்ரல் ஃபூல் செய்வதை இன்னும் கடைபிடித்து வருகிறார்கள்.

உலகம் முழுவதும் பலரைக் குழந்தைப் பருவத்துக்கு அழைத்துச் செல்லும் இந்த தினம், எப்படி உருவானது? அதன் வரலாற்றுப் பின்னணியில் பல கதைகள் உண்டு. 1500-களில் ஐரோப்பியர்கள் கடைப்பிடித்த ஒரு வழக்கமாக ஏப்ரல் 1 கூறப்படுகிறது. அப்போது, அந்த நாளின் பெயர் ஏப்ரல் மீன்கள் தினம். ஏப்ரல் மாதத் தொடக்கத்தில்




ஃபிரான்ஸ்ஸில் உள்ள ஆறுகளிலும் நீரோடைகளிலும் நிறைய மீன்கள் இருக்குமாம். அதனால் அந்தச் சமயத்தில் மீன்பிடிப்பது மிகவும் சுலபம். ஆகையால் மீன்கள் ஏமாறும் தினமாக ஏப்ரல் 1 கருதப்பட்டது.

காலப்போக்கில் மனிதர்களை ஏமாற்றும் தினமாக அது மாற்றம் கண்டதாம். ஏப்ரல் 1-ம் தேதி, முட்டாள்கள் தினம் என ஆனது.

புராதன வரலாற்றில் ரோமானிய நாட்காட்டியின்படி ஏப்ரல் 1-ம் தேதிதான் வசந்தம் ஆரம்பிக்கும் பொன்னாளாகும். புராதன வரலாற்றில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடியதற்கான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஹார்வி என்னும் வரலாற்றாய்வாளர் தனது குறிப்பில், பிரான்ஸ் தேசத்தின் அரசன் ஒன்பதாம் சார்லஸ் காலத்தில் மார்ச் மாதம் 25-ம் தேதியிலிருந்து ஒரு வார காலம் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகிறார். திருவிழாவைப் போல் நடைபெறும் இந்தக் கொண்டாட்டங்களின்போது ஒருவருக் கொருவர் பரிசுப் பொருள்களையும், அன்பளிப்புகளையும் வழங்கி தங்கள் அன்பை வெளிப்படுத்திக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். இந்த ஒரு வாரக் கொண்டாட்டத்தின் இறுதி நாளான ஏப்ரல் முதலாம் தேதி பெருவிருந்துடன் புத்தாண்டு விழா நிறைவெய்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். 1562-ம் ஆண்டில் போப் கிரிகோரி புதிய ஆண்டுத்

தொடக்கத்தை நடைமுறைப் படுத்தும்படி அறிவித்தார். ஆண்டுத் தொடக்க நாளாக ஜனவரி 1-ம் தேதியை அறிமுகம் செய்து வைத்தார். இனிமேல் பிரான்ஸ் தேசம் முழுமையும் இந்த நாட்காட்டிதான் என்று ஊர்தோறும் அறிவிக்கப்பட்டது.

இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது போப்பின் அறிவிப்பை நம்பாதவர்கள் ஏப்ரல் 1-ம் தேதியையே புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடினர். இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை ஐரோப்பிய தேசங்களும், அவற்றின் மக்களும் உடனே ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குச் சில காலம் எடுத்தது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அன்றைய காலகட்டத்தில் இதுபோன்ற செய்திகள் அல்லது மாற்றங்கள் சகலரையும் சென்றடைவதற்குரிய தகுந்த சாதனங்கள் இருக்கவில்லை. அத்தோடு பழைய வழக்கத்தைப் புறம் தள்ளி புதிய வழக்கத்தை ஏற்றுக் கொள்வதையும் இம்மக்கள் மறுத்திருக்கலாம்.

ஆகவே இம்மக்கள் தொடர்ந்தும் ஏப்ரல் மாதம் முதலாம் தேதியையே தமது புத்தாண்டுத் தினமாகக் கொண்டாடி வந்தார்கள். எவ்வாறாயினும் பிரான்ஸ் 1852-ம் ஆண்டிலும் ஸ்காட்லாந்து 1660-ம் ஆண்டிலும், ஜெர்மனி, டென்மார்க், நார்வே போன்ற நாடுகள் 1700-ம் ஆண்டிலும், இங்கிலாந்து 1752-ம் ஆண்டிலும், இந்தப் புதிய புத்தாண்டு தினத்தை அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டன.

புதிய வழக்கத்தை ஏற்றுக்கொண்டு ஜனவரி முதலாம் தேதியை புத்தாண்டாகக் கொண்டாடத் தொடங்கிய மக்கள், இந்த பழைய வழக்கத்தைப் பேணி ஏப்ரல் மாதம் முதல் தேதியில் புத்தாண்டைக் கொண்டாடுபவர்களை ஏப்ரல் முட்டாள்கள் என்று அழைத்தார்கள். இதிலிருந்து ஏப்ரல் முட்டாள்கள் தினம் ஆரம்பமாயிற்று என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

முட்டாள் தினம் பற்றிய இன்னொரு சுவாரஸ்யமான கதையையும் உண்டு. கதை இது தான். பண்டைய ரோமானிய அரசரான கான்ஸ்டன்டைன் என்பவரது ஆட்சி கடும் பிரச்னைகளுக்கும், பலத்த சர்ச்சைகளுக்கும் இடையே நடந்து வந்தது. அவசர காலத்தை சமாளிக்க தனது அரசவைக் கோமாளி கூகல் என்பவரை ஒரு நாள் மன்னராக இருக்கும்படி அறிவுறுத்தினாராம்.

கோமாளி என்று சொல்லப்படும் விதூஷகர்கள் மிகவும் புத்தி சாதுர்யம் வாய்ந்தவர்கள். ஆனால் முட்டாள்கள் என்றே மக்களால்



அழைக்கப்படுவார்கள். அத்தகைய கோமாளிகள் ஆட்சி செய்த அந்த ஒரு நாளைத்தான் முட்டாள்கள் தினம் என்று ரோமானியர்கள் கொண்டாடத் தொடங்கி அது உலகம் முழுவதும் பரவியது என்கின்றனர் கதை சொல்லிகள்.

இன்னும் சில புனைவுக் கதைகள் இருந்தாலும், ஏப்ரல் ஒன்று மட்டுமல்ல வருடம் தோறும் வாழ்நாள் தோறும் நம்மை முட்டாளாக உணரச் செய்யும் ஆற்றல் ஆளும் வர்க்கத்தினருக்கு மட்டுமே உள்ளது என்பது வரலாறு தாண்டிய உண்மை.

உண்மையில் எந்த மனிதனும் தனது முட்டாள்தனத்தையும் அறியாமையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இருப்பதில்லை. அதுவே மனிதன் தொடர்ந்தும் முட்டாளாய் இருப்பதற்கு மூலகாரணமாகிறது.

இந்த நுட்பத்தை பயன்படுத்தியே கூத்தாடிகள் மக்களை முட்டாளாய் வைத்திருக்கும் முயற்சியில் வெற்றி கண்டு வருகின்றனர்.

படித்திருக்கும் ஒரே காரணத்திற்காக ஒருவர் புத்திசாலி என்று அர்த்தமல்ல. இன்று கல்வி என்பதற்கு பொருள் நீங்கள் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். புத்தகத்தில் எழுதப்பட்ட சில கருத்துக்களை மனனம் செய்து தேர்வில் எழுதுகிறீர்கள், அவ்வளவுதான்.

ஆனால் நாம் அனைவரும் பார்க்கும் இந்த படிப்பு என்ற செயல்பாட்டில் ஞானத்திற்கு இடமில்லை. இதன்



விளைவாகப் படித்த முட்டாள்களை ஆங்காங்கே நாம் அடிக்கடி பார்க்கிறோம். இணையத்தை எளிதாக அணுக முடிவதால் பல சமூக ஊடக தளங்களில் பயனற்றதாக இருந்தாலும் பலர் தங்கள் கருத்துக்களை எளிதாகப் பகிர்ந்து கொள்ளலாம். இவைகளில் சில கொண்டிருக்கும் முட்டாள்தனமான கருத்துகளை எழுதியவர்கள் படித்தவர்கள் தானா என்ற ஐயம் ஏற்படுவது உண்மை தான்.

அட்டைப் படத்தில் காட்டப்பட்டுள்ளது போல முகத்தில் அரிதாரம் பூசுவதால் மட்டும் ஒருவர் கோமாளியாகிவிட முடியாது. அதே போல இன்னொருவர் முகத்தில் அரிதாரம் பூசி விடுவதால் மட்டும் அவரை கோமாளியாக்கி விட முடியாது. இதனை உணர்ந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதரிடத்திலும் மனிதாபிமானம், அன்பு, பாசம், ஒற்றுமை ஆகியன வளர்க்கப் பட்டுள்ளன. அதற்குள் புகுந்து கூத்தாடத் துடிக்கும், “கூத்தாடிகள்” தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டுமென்பதே எங்களது அவதானிப்பாகும்.

இறுதியாக, யாருக்கானது இந்த முட்டாள் தினம் என்கிற தலைப்பின் பதிலைக் கூறாமல் வாசகர்களையும் முட்டாளாக்கி விட்டுச் செல்ல நாங்கள் தயாராக இல்லை.யாவருக்குமானது இந்த முட்டாள்கள் தினம் என்பதுதான் நிதர்சனம். முட்டாளாகமல் நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் சமூகத்தோடு நீங்கள் ஒன்றித்து இருக்கவில்லை என்பது புலனாகிறது. ஆக, அனைவருக்குமான ஒரு தினத்தை அனைவரும் பெருமனதோடு ஏற்று கொண்டாடுவோம்.

***அனைவருக்கும் முட்டாள் தின வாழ்த்துகள்...!***

## ஆஸ்கர் விருது விழா

96 வது ஆஸ்கர் விருது விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கோலாகலமாக நடைபெற்றது. விருது நிகழ்ச்சியை 4வது முறையாக ஜிம்மி கிம்மல் தொகுத்து வழங்கி வருகிறார். அதில் கிறிஸ்டோபர் நோலனின் “ஓப்பன்ஹெய்மர்” படம் 13 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதேபோல் “பார்பி” படம் 8 பிரிவுகளில் இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் சிறந்த திரைப்படத்திற்கான ஆஸ்கர் விருதை “ஓப்பன்ஹெய்மர்” படம் வென்றுள்ளது. மேலும் இப்படம் சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த படத்தொகுப்பு உள்ளிட்ட 7 பிரிவுகளை விருதுகளை அள்ளி குவித்துள்ளது.



# செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனுக்கு ஞானவாய்ச்சியன் விருது

இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் பண்பாட்டு எனும் தொனிப்பொருளில் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாநாடு தலைவர் ச பத்மநாபன் தலைமையில் 21-03-2024 வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இன் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா சகிதம் விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

விருந்தினர்களின் மக்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நந்திக் கொடி ஏற்றும் வைபவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

வரவேற்பு உரையை மாநாட்டின் செயலாளர் பேராசிரியர் வி.பவனேசன் நிகழ்தியதுடன் பிரதம விருந்தினர் உரையை யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து இரண்டாவது சர்வதேச இந்து மாநாட்டின் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது இந்து கற்கைகள் பீடச்சபையின் ஏகோபித்த ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையை அடைந்த அமரர் கு.நகுலேஸ்வர குருக்களுக்கு மெய்ப்பொருள் விருதும், சைவ சமூக பணியாற்றும் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனுக்கு ஞானவாய்ச்சியன் விருதும், இலங்கையில் இந்து பண்பாட்டுக்கு உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு சிவநிதி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# வளர்த்த பல்லி கடித்து மரணம்

கொலராடோவில் வசித்த கிறிஸ்டோபர் வார்டு (வயது 34) என்பவர் 2 கிலா மான்ஸ்டர்ஸ் வகை பல்லிகளை வளர்த்து வந்திருக்கிறார். அந்த பல்லிகளில் ஒன்று கடந்த பிப்ரவரியில் அவரை 4 நிமிடங்கள் வரை கடித்துள்ளது. உடனேயே அவருக்கு அறிகுறிகள் தென்பட தொடங்கின. தொடர்ந்து பல முறை வாந்தி எடுத்திருக்கிறார். இறுதியில் இவர் உயிரிழந்துள்ளார்.

தென்மேற்கு அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் வளர கூடியவை கிலா மான்ஸ்டர்ஸ் (Gila monster) வகையை சேர்ந்த பல்லிகள். 2 அடி வரை வளர கூடிய இந்த வகை பல்லிகள் அதன் மேற்புற தோலின் வடிவான வண்ணம், அழகுக்காக விரும்பி வளர்க்கப்படுகின்றன.

இந்த பல்லிகள் விஷத்தன்மை வாய்ந்த ஊர்வன வகையை சேர்ந்தவை. இவற்றின் கடியானது, வலியை அதிகரிக்க செய்ய கூடியவை. ஆனால், கொல்ல கூடிய அளவுக்கு ஆபத்தில்லை. இதற்கு முன் 1930-ம் ஆண்டு ஒருவர் இந்த வகை பல்லி கடித்து ஒருவர் உயிரிழந்து உள்ளார். அதற்கு பின்னர் இந்த சம்பவம் நடந்துள்ளது என அரிசோனா மாநில பல்கலைக்கழக பேராசிரியர் டேல் டிநார்டோ கூறியுள்ளார்.





செல்வி சு. கிருந்திகா
இறுதி வருடம்
உளவியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பாடசாலைகளில் இயக்கத்திறன்களைப் பயன்படுத்துவதற்கான முக்கியத்துவம்

### 01.இயக்கத்திறன்கள்

உடல் தசைகள் மற்றும் உடல் எலும்புகளை பயன்படுத்தி மேற்கொள்ளும் செயல்பாடுகள் இயக்கத்திறன் செயற்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு மனிதனின் குழந்தை பருவத்திலேயே அவனது இயக்கத் திறனை மேம்படுத்துதல் அவசியமானதாக காணப்படுகின்றது. இயக்கத் திறன் கையகப்படுத்தல் நடத்தை வளர்ச்சிக்கு ஒத்ததாக காணப்படுகின்றது. அடிப்படை இயக்கத் திறன்களுக்கான வயது நெறிமுறைகள் வழக்கமான வளர்ச்சிக்கு பயனுள்ள நோயறிதல்களை வழங்குகின்றன. ஆனால், குழந்தை வளர்ப்பு நடைமுறைகளில் பண்பாட்டு வேறுபாடுகள் குழந்தைகளின் இயக்கத்திறனின் தொடக்க வயதை பாதிக்கின்றன. அவை வெளிப்படும் போதெல்லாம் கற்றலுக்கான புதிய வாய்ப்புகளை வடிவமைப்பதன் மூலம் இயக்கத் திறன்கள் வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைக்கின்றன.

* இயக்கத்திறன்கள் என்பது உடற்தசைகளின் இயக்கத்தை உள்ளடக்கிய செயல்கள் மற்றும் ஒருங்கிணைப்புச் செயல்பாடுகள் ஆகும். (Haywood,K M-1998)

* துல்லியமானதும் ஒருங்கிணைப்புடன் கூடியதுமான உடற்செயற்பாடுகளை செய்யும் ஆற்றலே இயக்கத்திறன்கள் ஆகும். (Schmidt,R.A-1982)

### 02. இயக்கத்திறன் வகைகள்

இயக்கத் திறன்களை பிரதானமாக இரண்டு முக்கிய வகைகளாக பிரிக்க முடியும். அவை பின்வருமாறு

**2.1) மொத்த இயக்கத் திறன்கள் (Gross Motor Skills)** : இவை உடலின் பெரிய தசைக் குழுக்களை பயன்படுத்துவதை உள்ளடக்கியது. இது பெருந்தசை வளர்ச்சி எனவும் அழைக்கப்படுகின்றது. பெருந்தசை வளர்ச்சி பிரதானமாக மூன்று விதங்களில் நோக்கப்படுகின்றது. அவை பின்வருமாறு

1. LOCOMOTOR: ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நகர்வதை குறிக்கிறது. உதாரணமாக நடப்பது ஓடுவது முதலியவற்றை குறிப்பிடலாம்.

2. NON-LOCOMOTOR: இருக்கும் இடத்திலிருந்து உடலை வளைப்பதைக் குறிக்கிறது.

3. MANIPULATIVE SKILLS: பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதை குறிக்கின்றது. உதாரணமாக பந்தை எறிதல் பந்தை பிடித்தல் முதலியவற்றை குறிப்பிட முடியும். இதனுள் நடைப்பயிற்சி ஓடுதல் குதித்தல் மற்றும் எறிதல் போன்ற செயற்பாடுகள் உள்ளடங்கும்.

”மேம்படுத்தப்பட்ட மொத்த இயக்கத் திறன்கள் விளையாட்டு முதலிய உடலியல் செயல்பாடுகளுக்கு உதவுவதுடன் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம் படுத்துகின்றது” (Malina,2014).

**2.2) சிறந்த இயக்கத் திறன்கள் (Fine Motor Skills) :**
பொதுவாக கைகள் மற்றும் விரல்களில் உள்ள சிறிய தசை இயக்கங்களின் ஒருங்கிணைப்பை உள்ளடக்கியதே சிறந்த இயக்கத் திறன்கள் ஆகும். இது சிறு தசை வளர்ச்சி எனவும் அழைக்கப்படுகின்றது. இதனுள் சட்டைப் பொத்தானை பூட்டுதல் எழுதுதல் வரைதல் ஆகியன உள்ளடங்கும்.

”நன்கு விருத்தி பெற்ற சிறந்த இயக்கத் திறன்கள் ஒருவரின் கையெழுத்து மற்றும் ஏனைய எழுதும்



செயற்பாடுகளுக்கு உதவுகின்றன.” (Feder & Majnemer, 2007).

### 03) பாடசாலை மாணவர்களுக்கான இயக்கத் திறன்கள்

பாடசாலை மாணவர்களின் வினைத் திறனான விருத்தி நிலைக்கு பல்வேறு பட்ட இயக்கத் திறன்களின் செயல்பாடுகள் உதவுகின்றன உதாரணமாக எழுதுதல் வெட்டுதல் வரைதல் முதலியவற்றை குறிப்பிட முடியும். மேற்குறிப்பிட்டது போன்ற மொத்த இயக்கத் திறன்கள் மற்றும் சிறப்பு இயக்கத் திறன்கள் ஆகிய இவ்விரண்டும் பாடசாலை மாணவர்களின் வினைத்திறனான இயக்கத்திற்கு அவசியமாகின்றன.

Vygotsky (1978) மற்றும் Piaget (1952) முதலிய உளவியலாளர்கள் அறிகைத் திறன் வளர்ச்சியில் இயக்கத் திறன்களின் முக்கியத்துவம் தொடர்பாக ஆராய்ந்து உள்ளனர். சிறுவர்களின் உடலின் மொத்தமான இயக்கத் திறன் வளர்ச்சிக்கு ஓடுதல் குதித்தல் மற்றும் விளையாடுதல் முதலிய செயல்பாடுகள் உதவுகின்றன. Gallahue மற்றும் Ozmun (2012) போன்ற அறிஞர்கள் குழந்தைகளின் ஒட்டு மொத்த இயக்க வளர்ச்சியில் இயக்கத் திறன்களின் பங்களிப்பு தொடர்பாக வலியுறுத்தியுள்ளனர். ”முக்கியமாக அடையாளம் காணப்பட்ட அடிப்படை இயக்கத் திறன்களாக ஓடுதல் பாய்தல் எறிந்து பிடித்தல் ஆகியன காணப்படுகின்றன” (Michael J Duncan, etc al, 2020).

### 04) பாடசாலை மாணவர்களில் இயக்கத் திறன்களின் முக்கியத்துவம்

உடல் மற்றும் அறிகை சார் அம்சங்களை உள்ளடக்கிய பாடசாலை மாணவர்களின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் இயக்கத் திறன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்களது கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியில் இயக்கத் திறன்கள் முக்கியம் பெற்றவையாக காணப்படுகின்றன. வெவ்வேறு அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பட்ட ஆய்வுகள் பாடசாலைகளில் இயக்கத் திறன்களை பயன்படுத்துவதற்கான முக்கியத்துவத்தினை தெளிவு படுத்துகின்றன. அந்த வகையில் Yolanda Alosno Alvarez & Jose Maria Pazos Couto (2020) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் பாடசாலை வகுப்பறைகளில் மாணவர்களது இயக்கத் திறன்களை வளர்ப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளனர்.

Chaire E Cameron, et.al (2016) ஆகியோர் தமது ஆய்வில் ”முறையான பாடசாலை கல்விகள் வெற்றிகரமாக மாறுவதற்கு மாணவர்களுக்கு



பல்வேறு திறன்கள் தேவை எனவும் பாடசாலை செயற்றிறன் மற்றும் சாதனைகளில் பிள்ளைகளின் இயக்கத் திறன்களை வளர்க்கும் கோட்பாடு வழிமுறைகள் மற்றும் அணுகுமுறைகளை ஊக்குவிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

### 4.1 மாணவர்களின் உடல் நலனுக்கு மிகவும் அடிப்படையாகும்.

பாடசாலை மாணவர்களில் ஓடுதல் குதித்தல் மற்றும் விளையாடுதல் போன்ற உடலின் மொத்த இயக்கத் திறன்களை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது அவர்களது இதய ஆரோக்கியம், தசை வலிமை மற்றும் ஒட்டுமொத்த உடல் நன்னிலை ஆகியவற்றை மேம்படுத்துகின்றது. Telama, et al (2014) தமது ஆய்வில் "பாடசாலைகளில் இயக்கத்திறன் மேம்பாடானது நீண்டகால சுகாதார நலன்களுக்கு பங்களிக்கிறது. முதிர் வயதில் நாட்பட்ட நோய்களின் அபாயத்தை குறைக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

### 4.2 மாணவர்களின் கற்றல் அடைதலுக்கு பங்களிக்கின்றது.

சிறிய தசைகளில் துல்லியமான இயக்கங்களை உள்ளடக்கிய சிறந்த இயக்கத் திறன்களானது மாணவர்கள் எழுதுதல் வரைதல் மற்றும் பொருட்களை கையாளுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு உதவுகின்றன. "இயக்கத்திறன் செயல்பாடுகள் மாணவர்களின் கல்வி செயல்பாடுகளில் ஈடுபாட்டையும் வெற்றியை நோக்கிய ஊக்கத்தையும் அதிகரிக்கின்றன" (Gallahue, et.al, 2012). இவை துல்லியமாகவும் தரமாகவும் கற்றல் செயல்பாடுகள் மேற்கொள்வதில் மாணவர்களில் நேரடியாக தாக்கம் செலுத்துவதனால் கல்வி வெற்றிக்கு உதவுகின்றது. பென்சிலை பிடிப்பதில் தொடங்கி விசைப்பலகையை பயன்படுத்துவது வரை இத்தகைய இயக்கத் திறன்கள்



கல்வி சார் சாதனைகளுக்கு வித்திடுகின்றன.

### 4.3 அறிகைத்திறன் மேம்பாட்டிற்கு உதவுதல்.

உடற்செயல்பாடுகள் மற்றும் அறிகைச் செயற்பாடுகளுக்கு இடையேயான வலுவான தொடர்பை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. "இயக்கத் திறன்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் சிக்கலான பிரச்சனைகளை சமாளிக்கும் திறனை மாணவர்களிடத்தில் மேம் படுத்துகின்றன". (Waasenberg et al, 2005). இயக்கத் திறன்களுடன் தொடர்புடைய செயல்களில் ஈடுபடுதல் நரம்பு இணைப்புக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. இதன் மூலம் நினைவாற்றல் பிரச்சனை தீர்க்கும் திறன் மனச்சோர்வை கையாளுதல் முதலிய அறிகை திறன்கள் மேம்பாடடைகின்றது.

### 4.4 மாணவர்களின் சமூக திறன்களை மேம்படுத்துகின்றது.

இயக்கத் திறன்கள் சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன. உடற்செயல்பாடுகளில் பங்கேற்பது உதாரணமாக குழுப்பணி தகவல் தொடர்பு மற்றும் சமூகத் தொடர்பு ஆகியவற்றை மேம்படுத்துகின்றது. உதாரணமாக குழு விளையாட்டானது மாணவர்கள் ஒற்றுமை, தலைமைத்துவம், பிரச்சனை தீர்க்கும் திறன்களை கற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது. இத்தகைய சமூகத் திறன்கள் பாடசாலைகளில் மட்டுமல்ல எதிர்கால முயற்சிகளிலும் விலைமதிப்பற்றவை. "ஒருங்கிணைந்த இயக்கத்திறன்கள் மாணவர்களிடையே குழு வேலை மற்றும் ஒத்துழைப்பு உணர்வை வளர்க்கின்றன" (Nebster, et al, 2005).

### 4.5 உணர்ச்சி சார் ஒழுங்கு முறைகளை பேண உதவுதல்.

விருத்தி பெற்ற இயக்கத் திறன்கள் கொண்ட மாணவர்கள் கல்வி அழுத்தங்கள் மற்றும் உளநலனை வளர்ப்பதில் ஏற்படும் சவால்களை சிறப்பாக கையாளக் கூடியவர்களாக காணப்படுவர். உடலியல் செயல்பாடுகளானது என்டோர்பின்களின் (Endorphins) வெளியீட்டோடு இணைக்கப் பட்டுள்ளது. இது மன அழுத்தத்தை குறைக்கவும் உள நன்னிலையை மேம்படுத்தவும் உதவுகின்றது. Peace (2012) என்பவர் தான் மேற்கொண்ட ஆய்வில் "உடல் இயக்க செயற்பாடுகள் மாணவர்களிடையே



மன அழுத்தம் மற்றும் பதட்டத்தை குறைக்கவும் உணர்வுகளை கையாளவும் உதவுகின்றன” என குறிப்பிட்டுள்ளார்.

### 4.6 மாணவர்களின் உடற் தசைகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துகின்றது.

“இயக்கத்திறன் மேம்பாடு பாடசாலை மாணவர்களுக்கு முக்கியமானதாக காணப்படுகின்றது. ஏனெனில் இது உடற்தசைகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துகின்றது அறிவை செயற்றிறனை மேம்படுத்துகின்றது மற்றும் ஒட்டுமொத்த கல்வி வெற்றிக்கு வழி வகுக்கின்றது. சிறந்த இயக்கத் திறன்களுக்கும் கல்வி அடைதல்களுக்கும் நேர்மறையான தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. பாடசாலை பாடத்திட்டத்தில் இயக்கத் திறன்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் வேண்டும்”. (Payne & Isaacs, 2017).

## 05) முடிவுரை

மேற்குறிப்பிட்ட விடயங்களின்படி இயக்கத்திறன் மேம்பாடானது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவசியம் என்பது புலனாகின்றது. அந்த வகையிலே பாடசாலை மாணவர்களின் கற்றல் அடைதலை ஊக்குவிப்பதற்கும் அவர்களது அறிகை செயல்முறைகளை மேம்படுத்துவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உள்ள நபர்களாக உருவாக்குவதற்கும் பிற்காலங்களில் தமது குடும்பம், தொழில் நிறுவனங்கள் மற்றும் சமூகத்துடன் இணைந்து நேர்மறையான சமூக திறன்களை வெளிப்படுத்தவும் சுறுசுறுப்பும், ஆரோக்கியமும் பெற்றவர்களாக வாழவும் பாடசாலைகளில் இயக்கத் திறன்களை மேம்படுத்துவதற்கான முறைகள் பயன்படுத்தப்படுவது அவசியமாகின்றது என்பதை இனங்காண முடிகின்றது.

எனவே பாடசாலை மாணவர்களின் இயக்கத் திறன்களை மேம்படுத்துவது தொடர்பாக ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியர்களும் கவனம் செலுத்துவதோடு இயக்கத்திறன் விருத்தி செயல்பாடுகளில் ஒவ்வொரு மாணவர்களையும் ஈடுபடுத்து வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக ஒவ்வொரு பாடசாலைகளிலும் பாடத்திட்டங்களோடு இணைந்து மாணவர்கள் செற்படக் கூடியதான இயக்கத்திறன் விருத்தி செயற்பாடுகள் மூலம் மாணவர்களது ஆளுமைகளையும் ஆற்றல்களையும் வளர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



# வாலோடு பிறந்த குழந்தை

சீனாவில் பிறந்த ஆண் குழந்தைக்கு 10 செ.மீ அளவில் வால் இருந்ததால் மருத்துவர்கள் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

Tethered Spinal Cord என சொல்லப்படும் மருத்துவ நிலையே இதற்கு காரணம் எனவும், இதில் எவ்வித அசைவும் இருக்காது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் பின்புறம் வால் இருக்கும் வீடியோவை மருத்துவர் லி சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

குழந்தையின் பின்புறம் இருக்கும் வாலை அகற்றுமாறு குழந்தையின் பெற்றோர்கள் மருத்துவர்களிடம் கோரிக்கை வைத்தனர். ஆனால், இந்த வால் நரம்பு மண்டலத்துடன் இணைந்து உள்ளதால், அறுவை சிகிச்சை செய்து வாலை அகற்றினால் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படும், எனவே வாலை நீக்க முடியாது என மருத்துவர்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னதாக, கயானா நாட்டில், கடந்த வருடம் ஜூன் மாதம் பிறந்த ஒரு குழந்தைக்கு வால் இருந்துள்ளது. பிறந்து 10 நாட்களே ஆன அந்த குழந்தையின் வாலை மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்து வெற்றிகரமாக அகற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



மகாகவி. பாரதியார்



# காக்காய் பார்லிமெண்ட்



நேற்று சாயங்காலம் என்னைப் பார்க்கும் பொருட்டாக உடுப்பியிலிருந்து ஒரு சாமியார் வந்தார். “உம்முடைய பெயரென்ன?” என்று கேட்டேன். “நாராயண பரம ஹம்ஸர்” என்று சொன்னார். “நீர் எங்கே வந்தீர்?” என்று கேட்டேன். “உமக்கு ஜந்துக்களின் பாஷையைக் கற்பிக்கும் பொருட்டாக வந்தேன். என்னை உடுப்பியிலிருக்கும் உழக்குப் பிள்ளையார் அனுப்பினார்.” என்று சொன்னார். “சரி, கற்றுக் கொடும்.” என்றேன். அப்படியே கற்றுக் கொடுத்தார்.

காக்காய்ப் பாஷை மிகவும் சுலபம். இரண்டு மணி நேரத்திற்குள் படித்து விடலாம்.

“கா” என்றால் “சோறு வேண்டும்” என்றர்த்தம். “கக்கா” என்றால்

"என்னுடைய சோற்றில் நீ பங்குக்கு வராதே" என்றர்த்தம். "காக்கா" என்றால் "எனக்கு ஒரு முத்தம் தாடி கண்ணே" என்றர்த்தம். இது ஆண் காக்கை பெண் காக்கையை நோக்கிச் சொல்லுகிற வார்த்தை. "காஹகா" என்றால் "சண்டை போடுவோம்" என்றர்த்தம். "ஹாகா" என்றால் "உதைப்பேன்" என்றர்த்தம். இந்தப்படி ஏறக்குறைய மனுஷ்ய அகராதி முழுதும் காக்கை பாஷை யிலே, க, ஹா, க்ஹ-முதலிய ஏழெட்டு அக்ஷரங்களைப் பல வேறுவிதமாகக் கலந்து அமைக்கப்பட்டிருக்கிறது. அதை முழுதும் மற்றவர்களுக்குச் சொல்ல இப்போது சாவகாசமில்லை. பிறருக்குச் சொல்லவும் கூடாது. அந்த நாராயண பரம ஹம்ஸ ருக்குத் தமிழ் தெரியாது. ஆகையால் அவர் பத்திரிகைகளை வாசிக்க மாட்டார். இல்லாவிட்டால் நான் மேற்படி நாலைந்து வார்த்தைகள் திருஷ்டாந்தத்துக்காக எழுதினதினாலேயே அவருக்கு மிகுந்த கோபமுண்டாய் விடும். ஒரு வார்த்தை கூட மற்றவர்களுக்குச் சொல்லக் கூடாதென்று என்னிடம் வற்புறுத்திச் சொன்னார். "போனால் போகட்டும். ஐயோ, பாவம்" என்று நாலு வார்த்தை காட்டி வைத்தேன்.



இன்று சாயங்காலம் அந்த பாஷை யை பரீக்ஷை செய்து பார்க்கும் பொருட்டாக, மேல் மாடத்து முற்ற வெளியிலே போய் உட்கார்ந்து பார்த்தேன். பக்கத்து வீட்டு மெத்தைச் சுவரின் மேல் நாற்பது காக்கை உட்கார்ந்திருக்கிறது. "நாற்பது காக்கைகள் உட்கார்ந்திருக்கின்றன என்று பன்மை சொல்ல வேண்டாமோ?" என்று எண்ணிச் சில இலக்கணக்காரர்கள் சண்டைக்கு வரக்கூடும், அது பிரயோஜனமில்லை. நான் சொல்வதுதான் சரியான பிரயோகம் என்பதற்கு போகர் இலக்கணத்தில் ஆதாரமிருக்கின்றது. "போகர் இலக்கணம் உமக்கு எங்கே கிடைத்தது?" என்று கேட்கலாம். அதெல்லாம் மற்றொரு சமயம் சொல்லுகிறேன். அதைப்பற்றி இப்போது பேச்சில்லை. இப்போது காக்காய்ப் பார்லிமெண்டைக் குறித்துப் பேச்சு. அந்த நாற்பதில் ஒரு கிழக் காக்கை ராஜா. அந்த ராஜா சொல்லுகிறது:

“மனிதருக்குள் ராஜாக்களுக்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுக்கிறார்கள். கோடி ஏழைகளுக்கு அதாவது சாதாரணக் குடிகளுக்குள்ள சொத்தை விட ராஜாவுக்கு அதிக சொத்து. போன மாசம் நான் பட்டணத்துக்குப் போயிருந்தேன். அங்கே ருஷ ியா தேசத்துக் கொக்கு ஒன்று வந்திருந்தது. அங்கே சண்டை துமால்படுகிறதாம். ஜார் சக்கரவர்த்தி கக்ஷி ஒன்று. அவர் யோக்கியர். அவரைத் தள்ளிவிட வேண்டுமென்பது இரண்டாவது கக்ஷி. இரண்டு கக்ஷ ியாரும் அயோக்கியர்களாதலால் இரண்டையும் தொலைத்துவிட வேண்டுமென்று மூன்றாவது கக்ஷி. மேற்படி மூன்று கக்ஷியாரும் திருடரென்று நாலாவது கக்ஷி. இந்த நாலு கக்ஷியாரையும் பொங்கலிட்டு விட்டுப் பிறகுதான் யேசுகிறிஸ்து நாதரைத் தொழ வேண்டுமென்று ஐந்தாவது கக்ஷி. இப்படியே நூ ற்றிருபது கக்ஷிகள் அந்த தேசத்தில் இருக்கின்றனவாம்.

“இந்த 120 கக்ஷியார் பரஸ்பரம் செய்யும் ஹிம்ஸை பொறுக்காமல் இந்தியாவுக்குப் போவோம். அங்கேதான் சண்டையில்லாத இடம், இமயமலைப் பொந்தில் வசிப்போம்.. என்று வந்ததாம். அது சும்மா பட்டணத்துக்கு வந்து அனிபெஸ ன்ட் அம்மாளுடைய தியஸாபிகல் சங்கத்துத் தோட்டத்தில் சில காலம் வசிக்க வந்தது. அந்தத் தோட்டக் காற்று சமாதானமும், வேதாந்த வாசனையுமுடையதாதலால் அங்கே போய்ச் சிலகாலம் வசித்தால், ருஷியாவில் மனுஷ்யர் பரஸ்பரம் கொலை பண்ணும் பாவத்தைப் பார்த்த தோஷம் நீங்கிவிடுமென்று மேற்படி கொக்கு இமயமலையிலே கேள்விப்பட்டதாம்.”

கேட்டீர்களா, காகங்களே, அந்த ருக்ஷியா தேசத்து ஜார் சக்கரவர்த்தியை இப்போது அடித்துத் துரத்தி விட்டார்களாம். அந்த ஜார் ஒருவனுக்கு மாத்திரம் கோடானு கோடியான சம்பளமாம். இப்போது நம்முடைய தேசத்திலே கூடத் திருவாங்கூர் மகாராஜா, மைசூர் ராஜா முதலிய ராஜாக்களுக்குக் கூட எல்லா ஜனங்களும் சேர்ந்து பெரிய பெரிய ஆஸ்தி வைத்திருக்கிறார்கள்.

“நானோ உங்களை வீணாக ஆளுகிறேன். ஏதாவது சண்டைகள் நேரிட்டால் என்னிடம் மத்தியஸ்தம் தீர்க்க வருகிறீர்கள். நான் தொண்டைத் தண்ணீரை வற்றடித்து உங்களுக்குள்ளே மத்தியஸ்தம் பண்ணுகிறேன். ஏதேனும் ஆபத்து நேரிட்டால், அதை நீக்குவதற்கு என்னிடம் உபாயம் கேட்க வருகிறீர்கள். நான் மிகவும் கஷ்டப்பட்டு உபாயம் கண்டுபிடித்துச் சொல்லுகிறேன். இதற்கெல்லாம் சம்பளமா? சாடிக்கையா? ஒரு இழவும் கிடையாது. தண்டத்துக்கு உழைக்கிறேன். எல்லாரையும் போலே நானும் வயிற்றுக்காக நாள் முழுவதும் ஓடி உழன்று பாடுபட்டுத்தான் தின்ன வேண்டியிருக்கிறது. அடே காகங்கள், கேளீர்”

ஒவ்வொரு காக்கைக்கும் நாள்தோறும் கிடைக்கிற ஆகாரத்தில் ஆறிலே ஒரு பங்கு எனக்குக் கொடுத்துவிட

வேண்டும். அதை வைத்துக் கொண்டு நானும் என் பெண்டாட்டியும், என் குழந்தைகளும், என் அண்ணன், தம்பி, மாமன், மச்சான், என் வைப்பாட்டியார் ஏழு பேர், அவர்களுடைய குடும்பத்தார் இத்தனை பேரும் அரை வயிறு ஆகாரம் கஷ்டமில்லாமல் நடத்துவோம். இப்போது என் குடும்பத்துக் காக்கைகளுக்கும் மற்றக் காகங்களுக்கும் எவ்விதமான வேற்றுமையும் இல்லை. ஏழெட்டு நாளுக்கு முந்தி ஒரு வீட்டுக் கொல்லையிலே கிடந்தது. அது சோறில்லை கறியில்லை. எலும்பில்லை ஒன்றுமில்லை அசுத்த வஸ்து கிடந்தது. அதைத் தின்னப் போனேன். அங்கே ஒரு கிழவன் வந்து கல்லை எறிந்தான். என் மேலே இந்த வலச்சிறகிலே காயம். இது சரிப்படாது. இனிமேல் எனக்குப் பிரஜைகள் ஆறில் ஒரு பங்கு கொடுத்துவிட வேண்டும்." என்று சொல்லிற்று.

இதைக் கேட்டவுடனே ஒரு கிழக் காகம் சொல்லுகிறது:

"மகாராஜா, தாங்கள் இதுவரையில்லாத புதிய வழக்கம் ஏற்படுத்துவது நியாயமில்லை. இருந்தாலும் அவசரத்தை முன்னிட்டுச் சொல்லுகிறீர்கள்! அதற்கு நாங்கள் எதிர்த்துப் பேசுவது நியாயமில்லை. ஆனால் தங்களுக்குள்ள அவசரத்தைப் போலவே என் போன்ற மந்திரிமாருக்கும் அவசரமுண்டென்பதைத் தாங்கள் மறந்துவிட்டதை நினைக்க எனக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாகிறது. தங்களுக்கு ஒவ்வொரு காக்கையும் தன் வரும்படியில் பன்னிரண்டில் ஒரு பகுதி கட்ட வேண்டுமென்றும், அதில் மூன்றில் ஒரு பாகம் தாங்கள் மந்திரிமார் செலவுக்குக் கொடுக்க வேண்டுமென்றும், ஏற்படுத்துதல் நியாயமென்று என் புத்தியில் படுகிறது" என்று சொல்லிற்று.

அப்பொழுது ஒரு அண்டங் காக்கை எழுந்து: கக்கஹா, கக்கஹா, நீங்கள் இரண்டு கக்ஷியாரும் அயோக்கியர்கள். உங்களை உதைப்பேன் என்றது. வேறொரு காகம் எழுந்து சமாதானப்படுத்திற்று. இதற்குள் மற்றொரு காகம் என்னைச் சுட்டிக்காட்டி: "அதோ அந்த மனுஷ்யனுக்கு நாம் பேசுகிற விஷயம் அர்த்தமாகிறது. ஆதலால் நாம் இங்கே பேசக்கூடாது. வேறிடத்துக்குப் போவோம்." என்றது. உடனே எல்லாக் காகங்களும் எழுந்து பறந்து போய்விட்டன.

இது நிஜமாக நடந்த விஷயமில்லை. கற்பனைக் கதை.



# நம் எதிரிகள்........!

கூவல் கொக்கரிப்பு
பொறாமை பேர் எண்ணம்
சாத்தான் இணைந்தான் போலும்
காசு பணவெறி தலைக்கெறி
பண்டித பதவிக்காய்
பகல் கனவில் பாயிட்டு

நெறிமுறை கையாண்டு
நேரத்தில் தோற்று
ஓடோடு ஓடி ஓய்ந்து
சாது கொண்ட பேர் ஆவியாய்
மௌனம் நற்பெயர் காண
பகற்கனவில் சாய்ந்து
ஓய்யராமாய் மனகோபுரம்
கண்டால் வென்றிடுமா ?

மடந்தை போக்கி
உன்னை நோக்கி செல்
மற்றவரின் நிலை உனக்கு
பொறாமை பேராசையாகி,
உன்னை மறந்து தவிக்கும்
என் எதிரியே...

நீ துரோகி தான் ஆனாலும்
நீ கண்முன் சாக துடிக்க
நான் வெல்வதா ? எனக்கு அழகு.



வியாத்தன்

ஐ.வி.மகாசேனன்

3



# என் கால்கள் வழியே...

### டெல்லிக்கான பயணம்..!

கடந்த பகுதியில விசா எடுத்தாச்சு. இனி இந்தியாவுக்கான பயணப்படல். இதுவரை இருந்த மகிழ்ச்சி சற்றே குறைந்து பதட்டம் தொற்றிக்கொண்டது. முதல் தனிக்குடித்தனம். இதுவரை டெல்லிக்கு போகப்போறன். இந்திய புலமைப்பரிசில் கிடைச்சிருக்கு என்ற சந்தோசம். விசா குத்தின பிறகு தான் சில யதார்த்தங்களை உணர, மனம் சற்று பயப்பிடவும் தொடங்கிச்சு. புது இடம். புது மொழி. நினைக்கையிலேயே பதட்டம்.

இந்த பதட்டத்தோடு டெல்லிக்கு எப்ப போறது என்டதில பெரிய குழப்பம். கொழும்பிலுள்ள இந்திய துணைத்தூதரகம் ஒருநாளில அழைச்சு விசாவ குத்தி தந்திட்டாங்க. ஆனா. டெல்லிக்கு போக வேண்டிய திகதிய பல்கலைக்கழக ஆரம்ப திகதிய கேட்டு போகச்சொன்னாங்க. டெல்லி பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு மாணவர்களுடைய பதிவு அலுவலகம், இந்தியாவின் அரச உத்தியோகத்துக்கான பத்துப்பொருத்தமும் பக்காவா பொருந்தி இருக்கு. திரைப்படங்களில தான் இந்திய அரச அலுவலகங்களின் அசண்டையை பார்த்து கேட்டு இருக்கிறேன். டெல்லி பல்கலைக்கழக முதுகலைகலைமானி ஆரம்ப திகதிய அறிவதற்கான இழுபறியில அனுபவபூர்மாகவும் அறிந்து கொண்டேன். தொலைபேசி அழைப்புக்கு பதில் இல்லை. பத்து மின்னஞ்சலுக்கு ஒரு குழுவான பதில் வரும். அதிலயும் திகதி இல்லை. செப்டெம்பர் நடுப்பகுதியிலேயே ஆரம்பிக்கும்னு சுருக்கமாக குறிப்பிட்டாங்க. மின்னஞ்சலில வந்த அனுமதி கடிதத்தில ஆகஸ்ட் முதல் வாரத்துக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும்னு போட்டிருந்தாங்க. எல்லாமே குழப்பம் தான். முடிவா ஒரு குழு மின்னஞ்சல் வாழ்த்தை

போட்டு செப்டெம்பர் நடுப்பகுதியே ஆரம்பிக்கும்னு ஒரு விளக்கத்தை தந்தாங்க.

2023இல இந்தியாவில G-20 மாநாடு நடந்திச்சு. செப்டெம்பர் 09-10 டெல்லியில தான் நடந்திச்சு. ஆக அதை குறிப்பிட்டு நெருக்கடிகளை தவிர்க்க, டெல்லி பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு மாணவர்களை செப்டெம்பர் நடுப்பகுதியே வாங்கனு விளக்கம் தந்தாங்க. ஆக நான் டெல்லி போறது செப்டெம்பர் நடுப்பகுதி தானுனு முடிவாய்ச்சு.

இலங்கைக்கான இந்திய தூதரகம் மற்றும் டெல்லி பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு மாணவர்கள் பதிவு அலுவலக குழு மின்னஞ்சல்களை பார்த்து இலங்கையில இருந்து டெல்லி போற ஆட்கள நட்பு பிடிச்சிடுவம்னு தேடினா, கிடைச்சது சிங்கள மாணவி ஒராளின்ட தொடர்பு தான். அந்த மாணவியின் நட்பினூடாக இன்னொரு தமிழ் மாணவி டெல்லி வருவதையும் அறியக்கூடியதா இருந்திச்சு. அதவிட சிங்கள மாணவிகள் வேறு இருவரும் முதுகலைமானிக்கு டெல்லி போவது சிங்கள மாணவியின் நட்பால் அறிய முடிஞ்சுது. ஏற்கனவே சிங்கள மாணவர்கள் சிலர் டெல்லியில் கற்பதால் அவர்களின் உதவியை பெற்று டெல்லி சென்றவுடன் பல்கலைக்கழகம் செல்வது, பதிவு வேலைகளை செய்வதற்கான உதவிகளை சிங்கள மாணவிகளே பார்த்து கொள்வதாக நம்பிக்கை அளித்தார்கள். இலங்கையில நாம இரு தேசிய இனங்களாக அரசியல் முரண்பாடுகள் இருந்தாலும், இந்தியாவுக்கு போன வெளிநாட்டு காரர் என்ற ஒரு அடையாளம். புதிய இடம் மற்றும் மொழி என்ற ஒரே நெருக்கடி தானே. இது ஒருவரை ஒருவர் தங்கி செயற்பட வேண்டியதாக்கியது. ஆக அனைவரும் சேர்ந்தே ஒருநாளில போவம்னு தீர்மானிச்சோம்.



செப்டெம்பர்-13னு முடிவு எடுத்தம். எல்லோரும் சேர்ந்து ஒரே இடத்திலயே Flight Ticket-உம் போட்டோம்.

டெல்லி போற எதிர்பார்க்கை. டெல்லி பல்கலைக்கழகம் என்ற பெருமிதம். நிர்வாகத்தில அசண்டைனாலும் டெல்லி பல்கலைக்கழகம் இந்தியாவின் முதன்மையான பல்கலைக்கழகங்களில ஒன்னு. இன்று இந்தியாவை ஆளும் தரப்பின் அரசியல்வாதிகள் பலரும் மற்றும் ஆள விரும்பும் எதிர்க்கட்சி தரப்பு அரசியல்வாதிகள் பலரும் தமது பட்டக்கற்கையை டெல்லி பல்கலைக் கழகத்திலேயே முடிச்சிருக்கிறாங்கனு சான்றிதழ் சொல்லுது. ஆம் இந்தியாவின் பிரதமரின் பட்டச்சான்றிதழ் டெல்லி பல்கலைக்கழகத்தையே குறிப்பிடுது. அதவிட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் மற்றும் இந்திய எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி எல்லாம் இங்க தான் படிச்சிருக்காங்க. அம்புட்டு பெருமைனா. நமக்கும் ஒரு பூரிப்பு தானே.

அந்த பூரிப்புடனேயே செப்டெம்பர் முதலாம் திகதி ஓய்வா இருக்கேக்க, டெல்லி பல்கலைக்கழக அரசறிவியில் துறை இணைய பக்கத்துக்க போய் பார்த்தா மறுபடி ஒரு குழப்பம். செப்டெம்பர்-04ஆம் திகதி முதுகலைமானி கற்கை ஆரம்பிக்குதுனு திகதி போட்டிருக்கு. என்னடா வில்லங்கம்னு அரசறிவியல் துறை மின்னஞ்சல தேடி அவங்களிட்ட எங்க பிரச்சினையை கொட்டி தீர்த்தா, அவங்க வெளிநாட்டு மாணவர் பதிவு அலுவலகத்த மிஞ்சினவங்களா இருந்தாங்கள். ஒரு பதிலுமே இல்லை. ஏற்கனவே செப்டெம்பர்-13க்கு Flight Ticket-உம் போட்டாச்சு. நடக்குறத பார்ப்பம்னு விட்டாச்சு.

சரி. வாங்க ஓடி போவம் செப்டெம்பர்-12. அதுக்கு இடையில எனது வருகை விரிவுரையாளர் உத்தியோகத்தின் இடைவிலகலின் போது மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு இரு வருட கற்பித்தலின் திருப்தியை தந்தது. வார்த்தை இல்லை. அதவிட வேலை எல்லாம் முடிக்க வேணும் என்ற இறுதிநாள் வரையிலான இழுத்தடிப்பு பதட்டங்கள் நல்ல அனுபவம். ஒவ்வொரு வேலை அனுபவத்தின் போதும் இறுதி வரை இழுத்தடிக்க கூடாது என்ற நினைப்பு. நினைப்பாகவே போகுது. மாறனும்.
ஆம். செப்டெம்பர்-13 அதிகாலையில டெல்லிக்கு விமானம். செப்டெம்பர்-12 பின்னிரவு சின்ன அண்ணான்ட நண்பருடைய முச்சக்கரவண்டியில கொழும்பில இருந்து விமான நிலையத்துக்கு வெளிக்கிட்டோம். இரவு சாப்பாடு விமான நிலையத்துக்கு பக்கத்தில ஒரு சாப்பாட்டு கடையில. அண்ணா கொத்துறொட்டி வாங்கினான். புயண பதட்டம் பசி இல்லை. சும்மா ரெண்டு வாய் எடுத்து போட்டேன். அப்ப அறியல ரெண்டு



வருசத்துக்கு கொத்து றொட்டி எனக்கு அரிய உணவு என்று. சரி. விமான நிலையம் போயாச்சு. டெல்லிக்கு சேர்ந்து பயணிக்க மின்னஞ்சலில தொடர்பு கொண்டு வட்சப்ல தகவலை பரிமாறிய நண்பர்களுக்காக காத்திருந்தோம். நமக்கு எல்லாம் கடைசி நேரம் வரை இழுத்தடிக்குறது ஒரு பழக்கமாய் போய்ச்சு. விமான நிலையத்துக்கு முன்கூட்டியே போனாலும் அந்த வழக்கம் இம்முறை நண்பர்களால வந்திச்சு. அவர்கள் வருகை தாமதமாகவே நான் உள்ள போய் Check-in வேலைகளை செய்து முடிச்சாச்சு.

இங்க மறுபடியும் ஒரு பிரச்சினை. இது எனக்கு இல்ல. நண்பர்களுக்கு. அவர்கள் தாமதமாகினதால, அவர்களுக்கு Check-in பூட்டியாச்சுனு அங்க இருந்த அலுவலகர் கொஞ்சம் வெருட்டினார். நண்பர்கள் சிங்களவர்கள் என்றதால அவங்க அழுது தங்கள மொழியில் உரையாடியதால, பிறகு அவங்களயும் அனுமதிச்சாங்க. மொழி முக்கியம்னு விளங்கிச்சு. இதே பண்டாரநாயக்க




சர்வதேச விமான நிலையத்தில நமக்கு இப்படி ஒன்னு நேர்ந்திருந்தா நாம அழ மட்டும் தான் முடியும். இந்த சம்பவத்த பதிவு செய்யேக்க எங்க வெளிநாட்டுக்காரங்க இலங்கைக்கு வருகின்ற போது படுற துன்பத்த சொல்றதும் பொருத்தமா இருக்கும். முரண்நகையான முடிவுகள். ஆம். விமான நிலைய அதிகாரிகள் புலம்பெயர் தமிழரிட்ட காசு பறிக்க அவங்கள மறிச்சு உன்ர கடவுச்சீட்டுல இது பிழை, அது பிழைனு தங்கன்ட மொழில கதைக்க. நம்ம உறவுகளும் எங்கள விட்டா சரினு காச கொடுத்திட்டு வருவாங்க. இன்னும் பலர் இவங்க தொல்லைய நினைச்சே இலங்கை வாறதுக்கு பயப்பிடுறாங்க. மொழியும் அதிகாரமும் பெரிய பிரச்சினை தான். நாம எதையும் பிரச்சினை வராத வகையில பார்த்துக்கிட்டா தான் நமக்கு பாதுகாப்பு.

சரி. நாம டெல்லி பயணத்துக்கு வருவம். இறுதியில விமானம் ஏறியாச்சு. கடைசி வரிசையில இருக்கை. இன்னும் 3.30 மணித்தியாலத்தில டெல்லியில தரையிறக்கம் என்ற பூரிப்புடனேயே தூக்கம். எழும்பினா டெல்லியில தரையிறக்கம் செப்டெம்பர் - 13 காலையில 6.00 மணி போல டெல்லி விமான நிலையம் வந்தாச்சு.

**டெல்லியில் பயணிப்போம்..!**

# முன்னணியில் இன்ஸ்டாகிராம்

உலகளவில் கடந்த ஆண்டு அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலிகளில் டிக்-டாக்கை பின்னுக்கு தள்ளி இன்ஸ்டாகிராம் முதலிடம் பிடித்துள்ளது. அதன்படி இன்ஸ்டாகிராம் பதிவிறக்கம் 2023ல் 20 சதவீதம் அதிகரித்ததாகவும், மொத்தமாக 767 மில்லியன் முறை இந்த செயலி பதிவிறக்கம் செய்யப்பட்டதாகவும் சந்தை நுண்ணறிவு நிறுவனம் சென்சார் டவர் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்மூலம், உலகிலேயே அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலி என்ற பெருமையை “இன்ஸ்டாகிராம்” பெற்றுள்ளது. இன்ஸ்டாகிராம் செயலி 767 மில்லியன் முறை பதிவிறக்கம் செய்யப்பட்ட நிலையில், டிக்டாக் 733 மில்லியன் முறை பதிவிறக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இன்ஸ்டாகிராமின் இந்த அபார வளர்ச்சிக்கு அதன் ரீல்ஸ் அம்சம் முக்கிய காரணமாக உள்ளதாக கருதப்படுகிறது.

இன்ஸ்டாகிராம் கடந்த சில ஆண்டுகளாக டிக்டாக்கைத் மிஞ்சும் வகையில் அதிகமாக வீடியோக்கள் பதிவேற்றப்படுகின்றன. அதன் ரீல்ஸ் அம்சம் இதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது என்று சென்சார் டவரின் மூத்த நுண்ணறிவு மேலாளர் ஆபிரகாம் யூசெப் கூறியுள்ளார்.



ABAYAM
அபயம்

# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்



தேவ அமலதாஸ் மரிஸ்ரெலா
உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வன் போக்கு நடத்தையை குறைத்தல்

இன்றைய காலகட்டத்தை பொறுத்தவரையில் அதிகம் பேசு பொருளாக காணப்படுவது வன்போக்கு நடத்தைகள் ஆகும். இளைஞர்கள் மத்தியிலே அதிகரித்து வருகின்ற இந்த வன்போக்கு நடத்தைகளானது சமூகத்தை எந்த அளவிற்கு சீரழிக்கின்றது என்பதனை உணராது இன்றைய இளம் தலைமுறை கொள்ளை தொடங்கி கொலை வரை உயிர்களின் மதிப்பு என்னவென்று அறியாது கண்மூடித்தனமாக வன்முறை நடத்தைகளுக்கு உட்படுவதனை காணமுடிகின்றது .உளவியலில் வன்போக்கு என்பது ஒருவருக்கு அல்லது சுற்றுச்சூழலில் உள்ள பொருட்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக தீங்கு விளைவிக்கின்ற நடத்தைகளை குறிக்கின்றது.

அந்த வகையில் வன் போக்கு நடத்தையானது ஒரு நபருக்கு உடல் ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ தீங்கினை விளைவிக்கும் ஒன்றாக காணப்படுகின்றது. வன் போக்கு ஆனது தீவிரமானதாக மாறுகின்ற போது அடிப்படையான உளநிலைக் கோளாறுகளை அல்லது வேறு வகையான மருத்துவப் பிரச்சினைகளுக்கு காரணமாக அமையலாம். அந்த வகையில் இந்த வன்போக்கானது பல்வேறு நோக்கங்களுக்காக செய்யப்படுகின்றது.

உதாரணமாக கோபம் அல்லது விரோதத்தை வெளிப்படுத்துதல், ஆதிக்கத்தினை நிலை நாட்டுதல், இலக்கினை அடைதல் போன்றவற்றிற்காக உடல் உள

ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தல் இதனுள் அடங்குகின்றது. அடித்தல் உதைத்தல் குத்துதல் போன்ற உடல் ரீதியானவையும் சொத்துக்களை சேதப்படுத்துதல் மற்றும் வாய்மொழி சார்ந்த கேலி, கூச்சல் ,ஒரு நபரை மிரட்டுதல், வார்த்தைகளால் திட்டுதல் போன்றவையும் இவ் வன்போக்கு நடத்தைகளாக காணப்படுகின்றன. இந்த வன்போக்கு நடத்தைகள் ஒவ்வொரு நபரும் வெளிப்படுத்தகின்ற முறையிலேயே வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்துபவையாக காணப்படுகின்றன.

வன்போக்கு நடத்தை என்றால் என்ன என்பது தொடர்பாக அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை கொடுத்துள்ளனர்.

***பரோன் மற்றும் பைரன்*** வன்போக்கு என்பது மற்றொரு உயிரினத்திற்கு தீங்கு விளைவிக்கும் இலக்கை நோக்கி இயக்கப்படுகின்ற நடத்தை ஆகும்.


***பண்டூரா*** வரையறுக்கப்பட்ட எதிர்மறை வன் போக்கு என்பது தனிப்பட்ட காயம் அல்லது சொத்து அழிவை விளைவிக்கும் செயல்கள் ஆகும்.

***யு. பி மோரஜ்இன்ஸ்கி*** வன் போக்கு ஒரு எதிர்மறையான ஒன்றாகும் இதன் விளைவாக மற்றுமொரு உயிரினம் வலி மிகுந்த தூ ண்டுதல்களை பொறுகின்றது. அந்த வகையில் ஒருவருக்கு கோபத்தினை தூண்டுகின்ற பொழுது அல்லது அதிகரித்த விரக்தி நிலைமையினாலோ அல்லது ஒருவருக்கு நேரடியாக கோபத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடு இடம்பெறுகின்ற போது வன்போக்கு ஏற்படும் என சமூக கற்றல் கோட்பாடு விளக்குகின்றது. இந்த வன்போக்கு நடத்தையினை எவ்வாறு பல்வேறு காரணிகள் தூண்டுகின்றதோ அதேபோல வன்போக்கு நடத்தையை இல்லாது அல்லது குறைக்கவும் பல்வேறு காரணிகள் உதவி புரிகின்றன.

நான்கு வகைகளில் வன்போக்கினை குறைக்கும் செயற்பாடுகளை குறிப்பிடலாம்.அந்த வகையில்

### 1.உள ரீதியாக குறைத்தல்

ஆரம்ப காலங்களை பொறுத்தவரையில் கோட்ட நீக்கம் செய்தல் தண்டனை வழங்குதல் என்பவற்றின் மூலம் வன் போக்கினை குறைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. கோட்ட நீக்கம் என்பது ஒருவரிலே எழுச்சி பெற்றுள்ள வன்போக்கை பொருத்தமான வழிகளிலே வெளிப்படுத்தி வைப்பதாகும். அதாவது ஒருவருக்கு ஏற்படுகின்ற வன்முறை சார்ந்த உணர்வுகளை பாதகமற்ற முறையில் அதாவது மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படாத



வண்ணம் தீர்த்துக் கொள்ளுகின்ற செயற்பாடாகும் .உதாரணமாக கூறும் போது ஒருவருக்கு கோபம் ஏற்படுகின்ற போது தலையணையை குத்துதல் கோபத்தை குறைக்க உதவும் இதன்போது அவர் பிறருக்கு தீங்கு பயக்காமல் தனது வன்முறை எண்ணத்தை குறைத்துக் கொள்வர். தண்டனை வன்போக்கினை குறைக்க உதவும் என்றாலும் அதன் மறுபக்கம் எதிர் விளைவுகளை உருவாக்கும் என உளவியலாளர்கள் கூறியுள்ளனர் அத்தோடு நகைச்சுவையூட்டுதல் விட்டுக்கொடுத்து செயற்படுதல், புரிந்துணர்வுடன் செயல்படுதல் வன்முறை சார்ந்த மனவெழுச்சி மேலோங்குகின்ற போது அதற்கு மாற்றீடாக வேறொரு மனவெழுச்சி துலங்களை காட்டுதல் என்பன உளரீதியான வழிமுறைகளாகும்.

### 2.உடல் ரீதியாக குறைத்தல்

யோகாசனம் செய்தல், தியானத்தில் ஈடுபடுதல் போன்றன மனதை ஒருமுகப்படுத்துவதற்கு சிறந்த வழிகள் ஆகும் .ஆகவே இவற்றில் ஈடுபடுதல் வன் போக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை குறைக்க உதவும். சாந்த வழிமுறைகளை இளைஞர்களுக்கு கற்றுக் கொடுத்தல், அவற்றில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல், போன்றன





பயனுடையதாக அமையும் அத்தோடு முறையான உணவுப் பழக்கத்தையும் பின்பற்றுதல் அவசியம் ஆகும்.

### 3.சட்ட ரீதியாக குறைத்தல்

வன்முறை சம்பவங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்துதலும் வன் போக்கினை குறைக்க உதவும். உதாரணமாக ஒரு சமூகத்தின் வன் போக்கினை தூண்டுகின்ற முக்கிய காரணியாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. எனவே போதைப் பொருள் பாவனையை குறைத்தல், தடுத்தல் என்பவற்றின் ஊடாக வன்போக்கினை குறைக்கலாம் சமுதாயத்தில் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் மற்றும் வறுமையை ஒழிப்பதன் மூலமும் வன்முறை நடத்தையை குறைக்கலாம்.

### 4.சமூக ரீதியாக குறைத்தல்

வன்முறை அற்ற தொடர்பாடலை மேற்கொள்ளுதல் அதாவது பல்வேறுபட்ட வன் போக்கான செயல்பாடுகள் இடம்பெறுவதற்கு அடிப்படை காரணம் தொடர்பாடல்

ஆகும் .இது சீரற்றதாக காணப்படுகின்ற போது வன் நடத்தைகள் வெளிப்படுகின்றன .அதாவது கடுமையான வார்த்தைப் பிரயோகம் மற்றவர்களின் மனதை புண்படுத்தும் செயற்பாடுகள் என்பவற்றை குறிப்பிடலாம் ஆகவே ஒரு விடயத்தையோ செய்தியோ வெளிப்படுத்துகின்ற போது முழுமையாகவும் மனப்பூர்வமாகவும் மற்றவரின் மனதை புண்படுத்தாத வகையிலும் இனிய மொழியை பேசுவதன் மூலம் வெளிப்படுத்துவது மற்றும் மற்றவர்களுடைய செய்திகள், கருத்துக்களை உள்வாங்குவது போன்றவை வன்முறையற்ற தொடர்பாடல் ஆக காணப்படுகிறது.

ஊடகங்களை சாதகமான முறையிலே பயன்படுத்துதல் வேண்டும். ஊடகங்கள் வன்முறையை தூண்டும் செய்திகளை காட்சிப்படுத்துவதை விடுத்து சமூகத்திற்கு நல்ல செய்திகளை வழங்கும் விதமாக தமது நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் தயாரிக்க வேண்டும் இதன் மூலம் வன் போக்கு நடத்துகளை குறைக்க முடியும் இவற்றை விட சமூக நற்பணிகளில் ஈடுபடுதல், சமூகத் திறன்களை வளர்த்தெடுத்தல், ஆன்மீக விடயங்களிலே அதிக நாட்டத்தை ஏற்படுத்துதல் அனைவரிடமும் அன்பு செலுத்துதல் என்பவற்றின் மூலம் வன்நடத்தைகள் இன்றி சமூகத்திற்கு பொருத்தமான சீரான நடத்தைகளை வெளிப்படுத்த முடியும்.

## தூமியினூடாக தருமபுரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



22.03.2024 கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியில், பொருத்தமான காரணங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 101 மாணவர்களுக்காக புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் பொறியியலாளர் திரு வி. ஜர்சிகன் அவர்களால் ”தூமி” அமையத்தின் ஊடாக கற்றல் உபகாரணப்பொதி வழங்கி வைக்கப்பட்டது. நல்லுள்ளம் படைத்த நன்கொடையாளருக்கு தூமி சார்பான நன்றிகள். மாணவர்களுக்குத் தேவையான உதவியை உரியவாறு ஒழுங்கமைத்துக் கொடுத்த கல்லூரி கணித பாட ஆசிரியர் திரு செ. தர்சன் அவர்களுக்கும், பொறியியலாளர் திரு. கு. கீர்த்தனர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.





எஸ்.எஸ்.நுஜன்

# CSK இன் வெற்றியின் இரகசியம்

ஐபிஎல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளரான ஸ்டீவன் பிளமிங், பிரபல ஊடகமான cricinfo உடனான நேர்காணலில் தங்களின் பலமாக அணியின் தத்துவம் மற்றும் வீரர்கள் தங்களைச் சேர்ந்தவர்கள் என்று உணரும் சூழலை உருவாக்குவதில் உள்ள தங்களின் நம்பிக்கை என்பவற்றை கூறியிருந்தார். இந்த உரையாடல், ரி20 கிரிக்கெட் எந்தளவுக்கு மாறிவிட்டது, மற்றும் சிஎஸ்கே எப்படி சீரான அணியாக உள்ளது என்பது பற்றியதாக இருந்தது.

### அணியின் ரகசியம் என்ன?

கொள்கை என்று பார்த்தால், ஒன்று, எளிமையாக வைத்திருந்தல் என்று நான் நினைக்கிறேன். இரண்டு, விளையாடும் கிரிக்கெட்டின் அளவைக் கருத்தில் கொண்டால், சில சமயங்களில் இது சவாலானது எனவே வீரர்கள், தங்களை சேர்ந்ததாக உணரும் சூழலை உருவாக்குதல். நாம் முயற்சி செய்து என்னவெனில், ஒரு வீரர் அணியில் சேரும்போதோ அல்லது அணிக்குத் திரும்பும்போதோ, அவர்கள் என்னத்திற்காக இணைகிறார்கள் அல்லது அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் வலுவான உணர்வைக் கொண்டிருப்பார்கள்.

முடிந்தவரை பல வீரர்களைத் தக்கவைக்க விரும்புகிறோம்
















என்பதில் எந்த இரகசியமும் இல்லை. நாங்கள் பயிற்சியாளர்களும் பெரிதாக மாறுவதில்லை என்பதால், அடிக்கடி வீரர்களை மாற்றும் மற்ற அணிகளை விடவும், வீரர்களை ஓரளவு விரைவாக அறிந்துகொள்ள முடிகிறது. எனவே ஒவ்வொரு தொடரிலும் வீரர்கள் ஒரு கடமையை செய்யும் படி கேட்கப்படுகிறார்கள். எனவே, பெருமை மற்றும் நோக்கத்தின் உணர்வு இன்னும் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்ற உணர்வை வீரர்களுக்கு வழங்க, கொஞ்சம் வித்தியாசமான சூழலை உருவாக்க முயற்சிக்கிறோம்.

**யாரோ ஒருவர் தங்களை சேர்ந்தவர் என்று உணரும் சூழலை உருவாக்குவது, செய்வதை விட சொல்வது எளிதானது. நீங்கள் அதை எப்படி செய்கிறீர்கள்?**

உண்மை, நாங்கள் முயற்சி செய்கிறோம். மற்றும், பாருங்கள், சில வீரர்களுக்கு நாம் அந்த இலக்கை அடையாமல் இருக்கலாம், ஆனால் பெரும்பாலான வீரர்கள், சூப்பர் கிங்ஸுடன் விளையாடி முடிக்கும் போது, அவர்கள் இனிமையான நினைவுகளுடன் முடிக்கிறார்கள். அதனால் அவர்கள் சூப்பர் கிங்ஸை விட்டு செல்லும் போது தங்கள் பங்களிப்பு தொடர்பில் நேர்மறையான கண்ணோட்டத்துடன் வெளியேறுவது மிகவும் முக்கியமானது. சிலர் விளையாடவில்லை, இது மிகவும் கடினமாக இருக்கும், ஆனால் வீரர்கள் வெளியேறியவுடன் என்ன சொல்கிறார்கள் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம்.

சில உண்மையான தொடர்புகளை நான் யூகிக்கிறேன். வீரர்களை நிர்வகிப்பதற்கான நுணுக்கங்களும் இருக்கின்றன - மிகவும் நேர்மையாக இருப்பது, அவர்களுடன் மிகவும் நன்கு திட்டமிடப்பட்டிருப்பது, அதனால் அவர்களிடம் எதிர்பார்க்கப்படுவது மிகவும் தெளிவாகவும் வரையறுக்கப்பட்டதாகவும் இருக்கும். எங்கள் எதிர்பார்ப்புகளுடன் வீரர்களுடன் முன்னோக்கிச் செல்லுதல், மேலும் அவர்கள் சொல்வதைக் கேட்பதற்கும் அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் உண்மையான நேரத்தை செலவிடுதல். இதைச் செய்வதை விடச் சொல்வது எளிது, ஏனென்றால் அதற்கு அதிக ஆற்றல் தேவைப்படுகிறது, அதனால்தான் கூடுதல் நேரத்தை நாங்கள் விரும்புகிறோம். வீரர்களை நீண்ட காலம் தக்கவைத்துக் கொள்ள முடிந்தால், அவர்களை பற்றி கொஞ்சம் ஆழமாகப் தெரிந்துகொள்ள நேரம் கிடைக்கும் என்று நினைக்கிறோம்.

**இந்த ஆற்றலை நீங்கள் பயிற்சியாளர்களாக உங்களுக்குள் பிரித்து கொள்கிறீர்களா, அல்லது பெரும்பாலும் அதை நீங்களே எடுத்துக்கொள்கிறீர்களா?**

ஒவ்வொருவருக்கும் அந்த பொறுப்பு உள்ளது, வீரருக்கு வீரர் கூட. இளம் இந்திய வீரர்கள் அனுபவம் வாய்ந்த மேற்கிந்திய தீவுகள் வீரர்களுடன் பேசும் சூழலை உருவாக்குவது பேசிக்கொள்கிறார்கள் - இது கேள்விப்படாதது! பயிற்சியாளர்களை












பொறுத்தவரை, அவர்கள் தங்களான வேலையை செய்ய முனைகிறார்கள். உதாரணமாக, மைக் ஹஸியாக இருந்தால், துடுப்பாட்ட வீரர்களுடான அவரது உறவு விரைவாக வளரும், அதே போல் எரிக் பந்துவீச்சாளர்களுடனும். நானும் தோனியும், மேலும் ஒரு ஒட்டுமொத்த பார்வையை முயற்சிக்கிறோம்.

அணி அறைகள் உள்ளன, அவை மிகவும் முக்கியமானவை, அங்குதான் வீரர்கள் அதிக நேரத்தை செலவிடுகிறார்கள், ஏனெனில், குறிப்பாக இந்தியாவில், வெளியே சென்று பல செயல்பாடுகளில் ஈடுபடுவது மிகவும் கடினம். எனவே ஒரு ஹோட்டல் சூழலை அமைப்பது நல்லது மற்றும் அது இயற்கையான தொடர்புகளை உருவாக்குவது முக்கியமானது. இது மிகவும் கட்டாயப் படுத்தப்படாமல், இயற்கையாக நடக்கும் சூழலை உருவாக்குகிறது.

